Registered as a News Paper in Sri Lanka; பக்கங்கள்: 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஞூ ஐப்பசி மீ 01 உ வியாழக்கிழமை (18 - 10 - 1990) ஹிஜ்ரீ 1411 ரபி. அப். 28 ஒசை 233

## இரத்தமின்மையால் காயமடைந்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மருத்துவமனையில் இராணுவ தாக்குதலால் காயமடைந்த ஒருவருக்கு ஏற்றுவதற்கு இரத்தமின்மையால்காயமடைந்தவர் மரணமடையவேண்டிய நிலை ஏற்பட்டது. மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனாவைத்தியசாலையில் எந்தப்பிரிவுஇரத்தத்திற்கும்கடுமையான தட்டுப்பாடுநிலவுகிறது. இதன்காரணமாக அவசரமாகபலாலி முகாம்(4ஆம் பக்கம் பார்க்க)

# 3 ஆவது நாளாக பலாலியில்

# அகோரக் குண்டு வீச்சு

## புலிகள்-இராணுவம் இரு முனைகளில் மோதல்

(பலாலி)

பலாலி இராணுவ முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் மூன்றாவது நாளாக சிறிலங்கா முப்படைகளும் பாரிய குண்டு வீச்சுத்தாக்குதலை மேற்கொண்ட அதே சமயம் முகாமில் இருந்து இரு முனைகளில் முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கும், புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் ஏற்பட்டது. இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை சண்டை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

பலாலி முகாமில் இருந்து கிழக்குப் பக்கமாகவும் (இடைக்காடு) தெற்குப் பக்கமாகவும் (வசாவிளான்) வெளியேற முயன்ற இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையே கடும் சண்டை மூண்டது. இச் சண்டை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதனால் சேத விபரங்கள் தெரியவில்லை.

விமானக் குண்டு வீச்சு

இதேவேளை விமானங்களின் குண்டு வீச்சால் தெல்லிப்பளை மருத்துவ மனை உட்பட பொதுமக்களின் வீடுகள், தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடம், தனியார் மருத்துவ மனைகள், தபால் அலுவலகம் எனப் பல கட்டடங்கள் சேதமடைந்துள்ளன.

நேற்றுக் காலை ஆறு முப்பது மணியளவில் இடம் (4ஆம் பக்கம் பார்க்க)

### அரியாலையில் ஹெலி தாக்கு இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை தபாற் கட்டைச் சந்தியில் நேற்று நண்பகல் நடந்த ஹெலித் தாக்குதலில் பத்துக்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன; இருவர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் ஜீவேந்திரா என்பவரும், அவரது மகள் தனுஷ்யா என்பவரும் காயமடைந்தவர்கள் ஆவர்.

### ஒருவர் பலி மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமில் இருந்து குடிமக்கள் வாழும் பகுதிகளை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார். பலர் காயமடைந்தனர்.

நேற்று முற்பகல் நடந்த இத் தாக்குதலில் சுமார் 40 வயது மதிக்கத்தக்க ஒருவர் கொல்லப்பட்டிருக்கிறார். இவரின் சடலம் மானிப்பாய் போதனா மருத்துவ மனைப் பிரிவு பிரேத அறையில் உள் (4ஆம் பக்கம் பார்க்க)

### பாரதீய ஜனதா தனது ஆதரவை விலக்கிக் கொண்டது

(டில்லி)

இந்தியப் பிரதமர் வி. பி. சிங்கின் சிறுபான்மை அரசாங்கத்திற்கு வழங்கிவந்த ஆதரவை விலக்கிக்கொள்வதாக பாரதீய ஜனதாக்கட்சி அறிவித்துள்ளது. நேற்றிரவு புதுடில்லியில் நடந்த பாரதீய ஜனதாக்கட்சியின்விசேட கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

ராம ஜென்மபூமி, பாபர் மசூதிப் பிரச்சினையில் பிரதமர் (4ஆம் பக்கம் பார்க்க)

### மின்சார உபகரணங்கள் இராணுவத்தால் அபகரிப்பு

(வவுனியா)

வவுனியாவில் வீட்டு உரிமையாளர்களை மிரட்டி வீடுகளில் பொருத்தப்பட்டிருக்கும் மின்சாரப் பொருட்களை இராணுவத்தினர் கழற்றிச் செல்கின்றனராம்.

வவுனியாவில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நகரப் பகுதி வீடுகளில் தங்கியுள்ள மக்களை மிரட்டியே இந்த அபகரிப்பு வேலையில் (4ஆம் பக்கம் பார்க்க)

### மண்டைதீவு, அல்லைப்பிட்டி மக்கள் குடியேறுகின்றனர்

இராணுவ நடவடிக்கைகளின்போது பலவிதங்களினாலும் பாதிக்கப்பட்ட அல்லைப்பிட்டி, மண்டைதீவுப் பகுதி மக்கள் படிப்படியாக இப் பகுதிகளில் குடியேறி வருகின்றனர்.

உடைக்கப்பட்டதும், எரிக்கப்பட்டதுமான வீடுவாசல்களை ஓரளவு திருத்தம்செய்து தற்காலிகமாக இருந்து வருகின்றனர்.

இவர்களின் வசதியினைக் கருத்தில்கொண்ட வேலணை (4ஆம் பக்கம் பார்க்க)

## நேற்று யாழ். குடா நாடெங்கும் பரவலான ஹெலித் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாடெங்கும் பரவலாக நேற்று ஹெலிகொப்ரர் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன.

பலாலி விமானத்தள சுற்றுப்புறத்திலிருந்து தெல்லிப்பளை, மயிலிட்டி, சுன்னாகம் தையிட்டி, குப்பிளான், வல்லைவெளி, கோப்பாய், உரும்பராய், நாவற்குளி, கைதடி, கல்வியங்காடு, ஆகிய பகுதிகளிலும் வேலணை, சரவணை, ஊர்காவற்துறை போன்ற தீவுப்பகுதிகளிலும் கடுமையான ஹெலிகொப்ரர் துப் (4ஆம் பக்கம் பார்க்க)

### கட்டுத்துவக்கிற்கு ஒருவர் பலி

(பூநகரி)

பூநகரியில் நேற்று கட்டுத்துவக்கு வெடித்து ஒருவர் இறந்துள்ளார்.

காயமடைந்தவர் பூநகரியில் இருந்து கோப்பாய் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இறந்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

### மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கும் பகல் நேர மின்சாரம் மட்டுமே

(மானிப்பாய்)

மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா மருத்துவ மனைப் பிரிவுக்கு முழுநேர நீர் மின்சாரம் இதுவரை வழங்கப்படவில்லை.

இந்த மருத்துவ மனைக்கு முழுநேர மின்சாரம் வழங்குவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. கடந்த இரு நாட்களாக பகல் வேளைகளில் மட்டும் மூன்றுமணி நேர மின்சாரம் வழங்கப்பட்டிருக்கின்றது.

### கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கிழக்கு மாகாணத்திலிருந்து இடம் பெயர்ந்த அரசாங்க திணைக்கள கூட்டுஸ்தாபன ஊழியர்களுக்கான முக்கிய கருத்தரங்கு 20.10.90 சனிக்கிழமை காலை 10 மணிக்கு (4ஆம் பக்கம் பார்க்க)

### இறப்பு, பிறப்பு, விவாக 2,500 விண்ணப்பங்கள் தேங்கிக் கிடக்கின்றன

(கொழும்புத்துறை)

யாழ். செயலகத்தில் உள்ள யாழ். மாவட்ட மேலதிகப் பதிவாளர் அலுவலகத்தில் பிறப்பு, இறப்பு, விவாகப் பத்திரங்களைப் பெறுவதற்கான சுமார் 2,500 விண்ணப்பங்கள் தேங்கிக்கிடக்கின்றன.

இருந்தும் தற்போது மின்சாரம் இன்மையாலும், போட்டோப்பிரதி எடுக்கும் இயந்திரத்தை இயக்க முடியாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இவ் அலுவலகத்துக்குத் தேவையான பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ்களை வழங்கக்கூடிய கையெழுத்துப் பிரதிகளுக்கான புத்தகங்கள் யாவும் கொழும்பு தலைமைக் காரியாலயத்தில் இருந்து (4ஆம் பக்கம் பார்க்க)

### அண்மையிலுள்ள அகதி முகாம்களுக்கு சுகாதார கள ஊழியர்கள் கடமைக்குச் செல்ல பணிப்பு

(வேலணை)

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சுகாதார திணைக்களத்தைச் சேர்ந்த சகல கள (வெளிக்கள) உத்தியோகத்தர்களும் உடனடியாக தங்கள் தங்கள் பகுதிகளில் உள்ள அகதி முகாம்களுக்குச் சென்று அங்கு சுத்தம், சுகாதாரத்தைப் பேணுவதற்கான நடவடிக்கையில் ஈடுபடவேண்டுமென யாழ். மாவட்ட சுகாதார உதவிப் பணிப்பாளரினால் சுற்று நிருபம் மூலம் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு அகதிகள் முகாங்களில் பணியாற்றும் சுகாதார கள உத்தியோகத்தர் (4 ஆம் பக்கம் பார்க்க)

## பணத்திற்கானவிநியோகத்தை 22ஆம் திகதிக்குள் முடிக்கவும்

(யாழ்ப்பாணம்)

மாத வருமானம் 1500 ரூபாவுக்கு மேற்பட்ட இடம் பெயர்ந்தவர்களுக்கான பணத்திற்கு விற்பனை செய்யும் முதலாம், இரண்டாம் கட்ட உலர் உணவுப் பொருட்களை வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் விநியோகிக்க வேண்டும் என யாழ். கூட்டுறவு அலுவலக உதவி ஆணையாளர் திரு. செ. லிங்கநாதன் பலநோக்கு கூட்டுறவு சங்க பொது முகாமையாளர்களை சுற்று நிருபம் ஒன்றின் மூலம் கேட்டுக் கொண்டுள்ளார்.

இச் சுற்று நிருபத்தில் மேலும் இடம் பெயர்ந்தோருக்கான முதலாம் இரண்டாம் கட்டமும், தொழில் இழந்தோருக்கான முதலாம் கட்ட உத்தரவுப் பத்திரமும் வழங்கப்பட்டு தங்களால் இதுவரை (4ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### டில்கா வாச் வேக்ஸ்
### [Dilka Watch Works]

வாடிக்கையாளரின் வசதிக்கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி ஆனைக்கோட்டையில் (கிராம சபைக்கருகில்) நடைபெறுகின்றது. சகல மணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலெக்ரோனிக் கடிகாரங்களின் பற்றறிகளும் விற்பனைக்குண்டு.

(B-1510)

### நியூ வீனஸ்
### NEW VENUS

எமது அன்பான வாடிக்கையாளருக்கு ஒரு வேண்டுகோள் எமது ஸ்தாபனம் 153 A பலாலி வீதியில் (விவசாய பாடசாலை அருகில்)(NEAR FARM SCHOOL) நடைபெறுகின்றது. சகல மணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலெக்ரோனிக் கடிகாரங்களின் பற்றறிகளும் விற்பனைக்குண்டு.

(B/1509)

### சித்ராலயா ஸ்ரூடியோ

சித்ராலயா நிறுவனத்தில் தரமான போட்டோஸ்ரட் பிரதிகளை 351, கோவில் வீதி நல்லூர் (கம்பன் கோட்டம் முன்பாக) என்ற முகவரியில் காலை 9 மணி முதல் 12 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். மற்றும் மாலை 2 மணி முதல் 5 மணி வரை புகைப் படம் பிடிக்கப்படும்.

(B/ 1496)

### ரதி வோச் வேக்ஸ்

ரதி வோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ் இல. 14 கஸ்தூரியார் வீதியில் இருந்து இல. 12 பொன்னையா லேன் ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையில் (பிடாரி கோயில் உப தபால் அலுவலகத்திற்கு அருகில்) இயங்கி வருகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். திருத்துதல் வேலையும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

(B-1459)

### போட்டோஸ்ரட்

தரமாக எந்த அளவிலும் உடனுக்குடன் எடுத்துக் கொடுக்கப்படும். ஸ்ரீ காந் புத்தகசாலை, நல்லூர் முன் பக்கம்; மக்மிலன் புத்தக சாலை, ஒட்டுமடம்.

(B/1507)


## நாளைமுதல் 'நந்தவன வாரம்'

தென்மராட்சி இந்து இளைஞர் ஒன்றியத்தின் ஒரு வருடப் பூர்த்தியை முன்னிட்டு கந்தசஷ்டிக் காலமாகிய நாளை பத்தொன்பதாம் திகதி தொடக்கம் இருபத்தாறாந் திகதி வரையுள்ள காலப்பகுதியை 'நந்தவன வாரமாக' அனுஷ்டிக்கும் படி மேற்படி ஒன்றியம் கேட்டுள்ளது.

பயன்தரு மரங்களை ஆலயப் பகுதியிலும், பொது விடங்களில் நாட்டுமாறு சகல ஆலய நிர்வாகத்தினரையும், சகல இந்து இளைஞர் மன்றத்தினரையும் ஒன்றியச் செயலாளர் திரு. வே. பாராளன் கேட்டுக் கொள்கின்றார். (மு)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் தர்மபாலன் புருஷோத்

மலர்வு
04-10-1986

உதிர்வு
18-10-1987

திதி: 12-11-1990

மூன்றாண்டு சென்றதடா! என்வாழ்வு இருண்டதடா!
என்னுள்ளம் துடிக்குதடா!
உன்னழகுத் திருமுகமும் பட்டுக்கன்னமதில்
குழிவிழும் புதுவழகுப் புன்னகையும்
தத்தித் தளிர்நடையும்-தினமும்
என்முன்னே தெரியுதடா!
என்னை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத் துயில்கொண்ட
என்அன்புச் செல்வமே! புருஷோத்!
உன் ஆத்மா சாந்தியடைய தினமும்
கண்ணீரால் அர்ச்சிக்கின்றேன்:

புங்குடுதீவு - 8

அப்பா,
உற்றார், உறவினர்.

(R/724)


க. பொ. த உயர்தர மாணவர்களுக்கான
## அறிவித்தல்

நாட்டின் சுபீட்சத்தை நோக்கிய பாதையில்...
எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள்.

திரு. வரதராஜன்
திரு. ஜெயராம்
திரு. மரியதாஸ்
திரு. சுப்பிரமணியம்
திரு. வைகுந்தநாதன்
திரு. ஸ்ரனிஸ்லாஸ்
திரு. முருகையா
திருமதி. சுப்பிரமணியஐயர்
செல்வி. உமாசங்கரி
திரு. நாகநாதன்
திரு. நந்தகுமார்
திரு. செல்வரட்ணம்
திரு. சந்திரமோகன்
திரு. ஐங்கரநேசன்

க. பொ. த. உயர்தரம் 92 ஆம் ஆண்டுக்கான கலை, வர்த்தக, விஞ்ஞான பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கான கலந்துரையாடல்

18 . 10 . 90 (வியாழன்) பிற்பகல் 3 மணி

க. பொ. த. உயர்தரம் 90, 91 ஆம் ஆண்டுகளுக்குரிய கலை, வர்த்தக, விஞ்ஞான மாணவர்களுக்கான கலந்துரையாடல்

19. 10. 90 (வெள்ளி) பிற் பகல் 3 மணி

அனைவரும் சமுகமளிக்கவும்

## யூனிவேர்சல்

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(B/1513)


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி





அமரர்
இளையதம்பி சிவராசா
அதிபர், ந/ஞானோதையா வித்தியாலயம்
உதிர்வு:
19-05-1987

அமரர்
பராசக்தி சிவராசா
ஆசிரியை, யா/சன்மார்க்க வித்தியாலயம்
உதிர்வு;
21-10-1987

திதி: 18-10-1990

உங்களைப் பிரிந்து
ஆண்டுகள் மூன்று
சென்று விட்டன
நாம்
முன்னூறு ஆண்டுகளின்
சுமைகளைத் தாங்கிவிட்டோம்
உங்களிடம் ஒப்படைத்தோம்
எம் இன்ப - துன்பங்களை
இப்போது
நமக்கில்லை யாருமே
ஆனாலும்
உங்களின் ஆத்மா
என்றென்றும் எம்மை
வழி நடத்தும்.

உங்களை இழந்து பரிதவிக்கும்
— அன்பு மக்கள்

(R 744)


உங்கள் தற்போதைய உடனடித் தேவைகளுக்கு
- வீட்டு மின்னிணைப்புகள்
- வெல்டிங்
- பிளம்பிங் வேலைகள்
- மோட்டர் றிவைன்டிங்

மற்றும் சகல மின்சார வேலைகளும் சலுகை அடிப்படையில் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

## ஜெகஜோதி என்ஜினியறிங் வேக்ஸ்

41, பஜார் லேன், யாழ்ப்பாணம்.

(B/1481) பதிவு இல. 4376.



## 'நீமியா உரம்'

நெற்பயிருக்கு மட்டுமன்றி
மற்றும் பயிர்களுக்கும்
சிறந்த அடிக்கட்டு உரம்
நீண்டகால மண்வளம்
நிறைவிளைச்சல் அதன் சிறப்பு.....

இணுவில், திருநெல்வேலி
அண்ணா கோப்பி கடைகளிலும்
இணுவில் அண்ணாபாமிலும்கூட
விற்பனையாகிறது.

கிலோ பக்கெற் ரூபா, 5-00
25 கிலோ பக்கெற்றுக்களிலும் கிடைக்கிறது.
தொகையாக வாங்குவோருக்கு விசேட சகாய விலை.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

(B/1574)

சிந்தனைக்கு

*நன்மை செய்யாவிடினும்*
*தீமையாவது செய்யாதே*

— தமிழ்ப்பழமொழி


# ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம். 18-10-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05


## திட்டமிட்ட செயல்

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதியில் நடைபெறும் இனப்படுகொலைகளையும், இராணுவ அட்டூழியங்களையும் இந்தியா திட்டமிட்டு மறைத்து வருகின்றது. அதாவது தனது நலனுக்காக சிறிலங்கா அரசாங்கத்தின் இன அழிப்பிற்கு ஒத்துப்போகின்றது எனக் கொள்ளலாம்.

ஒரு பிரச்சினை சர்வதேச அரங்கில் பெறும் முக்கியத்துவத்திற்கு வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் அப்பிரச்சினைக்குக் கொடுக்கும் முக்கியத்துவமும் ஒரு காரணமாகும். அத்தோடு அப்பிரச்சினை தொடர்பான அபிப்பிராயத்தைத் திரட்டுவதிலும் வெகுசனத் தொடர்புச் சாதனங்களின் பங்கு கணிசமான அளவில் உண்டு. வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் ஒரு பிரச்சினை பற்றி நல்ல அபிப்பிராயத்தையோ, அல்லது கெட்ட அபிப்பிராயத்தையோ உருவாக்கவல்லன.

வடக்கு - கிழக்கில் நடைபெறும் விடுதலைப் போராட்டத்தை கொச்சைப்படுத்தி 'பயங்கரவாத நடவடிக்கைகள்' என சித்தரித்துக் காட்ட சிறிலங்கா வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் முனைகின்றன. இதனால் இனப்படுகொலைகளைப் புரியும் சிறிலங்கா இராணுவத்தின் நடவடிக்கைகள் 'பயங்கரவாத ஒழிப்பு' என செய்தியாக வெளிவருகின்றன.

இன்றைக்கு இலங்கைத் தமிழர் விடயத்தில் இந்தியாவும் சொற்பிரயோகங்களில் சிறு மாற்றங்களுடன் அதையே செய்து வருகின்றது. இனப்படுகொலைகளை மறைத்து சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் விடும் செய்திகளையே இந்தியச் செய்தியாளர் கொழும்பில் இருந்து அனுப்புகிறார். இவை உண்மைக்குப் புறம்பான செய்திகள் எனத் தெரிந்திருந்தும், அவர் உண்மையைக் கண்டறிய முயற்சிப்பதில்லை. அத்தோடு செய்தியாளர் கொழும்பை விட்டு வெளியில் செல்வதும் இல்லை. மேலும் நெருக்கடியான மாவட்டங்களில் இருந்து கொழும்பிற்கு வருபவர்களைக்கூட அவர் சந்திக்க முயற்சிப்பதில்லை. இது செய்தியாளரின் தவறாக ஒருபோதும் இருக்காது. இது அவருக்கு விடுக்கப்பட்ட பணிப்புரையாகவே இருக்கும்.

இந்தியா திட்டமிட்டே இனப்படுகொலைகளை மறைத்து வருகின்றது என்பது இந்திய ராஜ்ய சபா தி. மு. க. உறுப்பினர் வை. கோபாலசாமியை ஐ. நா. சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளத் தெரிவு செய்யாமல் இருந்ததில் இருந்தே தெரியவரும்.

வை. கோபாலசாமி ஐ. நா. சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டால் கட்டாயமாக இலங்கைத் தமிழர் படுகொலை சம்பந்தமான பேச்சு அங்கு இடம் பெறும். இதனால் பல நெருக்கடிகள் தோன்றும் என எதிர் பார்த்தே கோபாலசாமி சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

இனப்பிரச்சினை இலங்கையின் தன் 'உள் வீட்டுப் பிரச்சினை' என்றே இந்தியா கருதுகின்றது. இதனால் இப்பிரச்சினை சர்வதேச அரங்கிற்குச் செல்வதை இந்தியா விரும்பவில்லை. இப்பிரச்சினை தனது கை நழுவி சர்வதேசபிரச்சினையாக மாறிவிட்டால் இலங்கையில் உள்ள தனது பிடி தளர்ந்துவிடும் என இந்தியா கருதுவதால்தான் இனப்படுகொலை பற்றிய செய்திகள் வெளியில் செல்வதை இந்தியா விரும்பாததோடு, மறைக்கவும் முற்படுகின்றது.

'உள் வீட்டுப் பிரச்சினை' ஒன்று ஐ. நா. விற்கோ வேறு சர்வதேச ஸ்தாபனங்களுக்கோ சென்றால் அதனால் ஏற்படும் விளைவுகள், தொந்தரவுகளும், சர்வதேச அழுத்தங்களும்எவ்வாறு இருக்கும்என்பது இந்தியாவிற்கு நன்கு தெரியும். காஷ்மீர் பிரச்சினை ஐ. நா. விற்குக் கொண்டு செல்லப்பட்டதனால் இந்தியா தான் அனுபவித்த நெருக்கடியை இன்னும் மறக்கவில்லை. ஏனெனில் தற்பொழுதும் அதன் அழுத்தம் உள்ளது. ஆகையினால் தமிழர் படுகொலை செய்யப்படுகின்ற போதிலும், பிரச்சினை தனது கையை மீறிப் போய்விடும் என்பதற்காக இலங்கையில் சிறிலங்கா இராணுவம் மேற்கொள்ளும் இனப் படுகொலையை இந்தியா மூடி மறைக்கப் பார்க்கின்றது.

இதன் மூலம் இந்தியாவிடம் இருந்து இலங்கைத் தமிழர் எதிர்பார்க்கும், மீண்டும் மீண்டும் கோரிய தார்மீக உதவியை வழங்க இந்தியா தற்பொழுதும் தயாராக வில்லை எனத் தெரிகின்றது. ஆனால் இந்தியா உதவுவதும் உதவாமல் இருப்பதும் அதன் விருப்பம். ஆனால் தற்போதைக்கு எங்கள் போராட்டத்தை மழுங்கடிக்கவும், சிதைக்கவும் தமது வெகுசன தொடர்புச் சாதனங்களைப் பாவிக்காமல் மட்டும் இருந்தாலே இன்று போதுமானது. ஏனெனில் உலை வாயை மூடலாம். ஊர் வாயை மூட முடியாது. இந்தியா விரும்பினாலும் சரி விரும்பாவிட்டாலும் சரி இலங்கை இனப்பிரச்சினை சர்வதேசப் பிரச்சினையே.

# உணவோ, மருந்தோ கிடையாது;
# ஈமக்கிரியைக்கு ரூபா 2,000 இனாம்!

**லோகன்**

வளைகுடாவில் ஈராக் என்ற வல்லமை பொருந்திய அரசு, சிறிய குவைத்மீது தனது படைகளை அனுப்பி அதனை சர்வதேச வரன்முறைகளுக்கு அப்பாற்பட்ட வகையில் ஆக்கிரமித்துவிட்டது. இதனைத் தொடர்ந்து சர்வதேச நாடுகள் அனைத்தும் ஈராக் மீது பொருளாதாரத் தடையைக் கொண்டுவந்தன. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் இதற்கு ஆதரவாகத் தீர்மானம் இயற்றப்பட்டது. இதில் அத்தியாவசிய உணவு மற்றும் மருந்துவசதிகள் தவிர்ந்த ஏனைய அனைத்துத் தொடர்புகளையும் கடந்த ஆகஸ்ட் மாதம் ஏழாம் திகதியிலிருந்து துண்டித்துக் கொள்வதென சர்வதேச நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஒரு சுதந்திரமான தேசத்தை தனது இராணுவ பலத்தின் உதவியுடன் ஆக்கிரமித்த ஈராக்கிற்கு அத்தியாவசிய மருந்து, உணவுப் பொருட்களை அனுப்புவதற்கு மனிதாபிமானம என்ற வகையில் அனைத்து நாடுகளும் சம்மதம் தெரிவித்துள்ளன என்பதை இங்கு தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

ஆனால் தமிழர்களைத் தனது நாட்டின் மக்கள் எனக் கூறிக்கொள்ளும் சிறிலங்கா அரசு தனது ஆயுத பலத்தின் முழு சக்தியையும் திரட்டி இராணுவ நடவடிக்கையைக் கடந்த நான்கு மாதங்களாக நடாத்தி வருகின்றது.

அதே நேரம் பொருளாதாரத் தடை என்ற போர்வையில் உணவு மற்றும் மருந்துப் பொருட்களை வடபகுதிக்குக் கொண்டுவராதபடி இராணுவத்தடைகளை ஏற்படுத்திவிட்டது. வடபகுதியில் தொடர்ச்சியான பட்டினி வாழ்வுக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இதன் விளைவாக எம் மத்தியில் புதிய பல மாற்றங்கள் ஏற்பட்டு வருவதை அண்மைக்கால வைத்திய அறிக்கைகள் எடுத்துக்காட்டுகின்றன.

### தாய்- சிசு மரணம்

தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கையாலும் பொருளாதாரத் தடையாலும் அத்தியாவசிய மருந்துத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையிலும் கடந்த இரண்டு மாத இடைவெளியில் பிறந்த குழந்தைகளில் இருபத்தைந்து குழந்தைகள் இறந்துபோய் உள்ளன. பொதுவாக வடபகுதியில் ஆயிரத்துக்கு 0·5 தொடக்கம் 0·8 வரை இருந்த கர்ப்பிணித் தாய்மாரின் மரண வீதம் ஆயிரத்துக்கு இருபது வீதமாக அதிகரித்து உள்ளது. இதேபோல பொதுவாக ஆயிரத்திற்கு இருபத்தியெட்டுக் குழந்தைகள் இறக்கும் இடத்தில் ஆயிரத்துக்கு நூறு குழந்தைகள் என்ற அளவுக்கு சிசு மரணவீதம் உயர்ந்து விட்டது.

இந்த நிலை குறித்து அண்மையில் வெளிவந்த வைத்திய அறிக்கைகளை ஆதாரம் காட்டிய செய்திகள் அரசின் பொருளாதாரத் தடை நடவடிக்கைகளால் போஷாக்கான உணவுக்குத் தட்டுப்பாடு நிலவுவதும் இராணுவ அச்சுறுத்தலால் உளவியல் ரீதியாக கர்ப்பிணித் தாய்மார்கள் ஏக்க நிலைக்கு அடிக்கடி உட்படுவதுமே என காரணம் தெரிவித்தன.

மேலும் இதே காரணங்களால் அண்மை மாதங்களில் பிறந்த குழந்தைகளின் எடை சாதாரணமாக நாட்டில் பிறக்கும் குழந்தைகளின் எடையிலும் பார்க்க 25% குறைந்ததாக உள்ளதை அவதானிக்க முடிந்ததாகவும் மருத்துவ அறிக்கைகள் கூறுகின்றன.

### எரிபொருள் மின்சார தடை

வைத்தியசாலையின் உபயோகத்திற்குத் தேவையான அளவுக்குக் கூட மண்ணெண்ணெய், பெட்ரோல், டீசல் என்பனவற்றை சிறிலங்கா இராணுவம் வடபகுதிக்கு அனுமதிக்கவில்லை. இந்த எரிபொருள் தடையால் எமது பகுதியில் இடம் பெற்ற அப்பாவிப் பொதுமக்கள் மீதான விமானக் குண்டுவீச்சில் எத்தனையோ அப்பாவிப் பொது மக்கள் மருத்துவ வசதிக்கு எடுத்துச்செல்ல முடியாது பரிதாபமான உயிரிழப்பிற்கு உள்ளாகினர்.

(தொடரும்)

ராம ஜென்மபூமி, பாபர் மசூதி பிரச்சினை

# அனைத்துக் கட்சிக் கூட்டத்தை பாரதீய ஜனதா புறக்கணித்தது

(டில்லி)

ராமஜென்ம பூமி, பாபர் மசூதி பிரச்சினைக்கு தீர்வு காணுமுகமாக நேற்று நடத்தப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பாரதிய ஜனதாக் கட்சி கலந்து கொள்ளவில்லை.

கூட்டத்தில் கலந்துகொள்ளாதது பற்றி கருத்து வெளியிட்ட பாரதிய ஜனதாக்கட்சியின் பொதுச் செயலாளர் கிருஷ்ணலால் சர்மா ஏற்கனவே சென்னையில் நடந்த தேசிய ஒருமைப்பாட்டுக் கூட்டத்தைப் புறக்கணித்தது போலவே அதன் தொடர்ச்சியாக நடைபெறும் இக்கூட்டத்திலும் கலந்துகொள்ளப் போவதில்லை என தமது கட்சி முடிவு எடுத்ததாகத் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் பங்கேற்பதால் பலன் ஏதும் இல்லை என்று கருதுவதாலேயே இரு கூட்டங்களிலும் பங்குகொள்ளவில்லை என்றும் தெரிவித்தார்.

இதேவேளை சி. பி. ஐ. எம். இக்கூட்டத்தில் கலந்துகொண்டு ஆதரவு அளித்து வருகின்றது. பேச்சு வார்த்தையின் மூலம் இந்தப் பிரச்சினைக்கு சமரசம்காணப்படாவிட்டால் நீதிமன்ற தீர்ப்புக்காக அனைத்துக் கட்சிகளும், மக்களும் காத்திருந்து அதனை மதிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டது.

சி. பி. ஐ. எம்மின் பொதுச் செயலாளரான நம்பூதிரிபாட் கருத்து வெளியீடுகையில் பாபர் மசூதியை இடிக்கும் எந்த ஒரு செயலையும் தமது கட்சி ஆதரிக்காது என்று தெரிவித்தார்.

# லெபனானில் எல்லைகள் அழிப்பு

(பேரூட்)

லெபனான் பேரூட் நகரில் கிறிஸ்தவர்கள் வாழும் பகுதியையும் முஸ்லிம்கள் வாழும் பகுதியையும் இதுவரை காலமும் எல்லைகள் அமைத்துப் பிரித்து தனிமைப் படுத்திவைத்திருந்தனர். இந்த எல்லைகளை அழிப்பதென்று அரசாங்கம் எடுத்த முடிவைத் தொடர்ந்து, எல்லைகளை அழிக்கும் வேலைகள் பேரூட் நகரில் மேற்கொள்ளப் படுகின்றன.

தென்ஆபிரிக்காவில்

# அனைத்து அரசியல் கட்சிகளும் விடுதலை

(டில்லி)

தென் ஆபிரிக்காவில் கைது செய்யப்பட்டிருக்கும் அனைத்து அரசியல் கட்சிகளையும் விடுதலை செய்ய தென் ஆபிரிக்க அரசு இணங்கியுள்ளதாக தென் ஆபிரிக்க காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார்.

வன்முறைக் குற்றங்கள் என்று குற்றஞ் சாட்டப்பட்டோர் உட்பட அனைத்து அரசியல் கைதிகளையும் அடுத்த ஏப்பிரல் மாதத்திற்குள் விடுதலை செய்யவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நிற, இன வேற்றுமை ஏதுமின்றி அனைவருக்கும் வாக்குரிமை என்ற அடிப்படையில் உண்மையான ஜனநாயகஅரசு ஒன்றை அமைத்து இன ஒதுக்கல் கொள்கையை முற்றிலுமாக அகற்றுவதைத் தவிர தென் ஆபிரிக்கப் பிரச்சினைக்கு வேறு தீர்வு இல்லை என்று நெல்சன் மண்டேலா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் புதுடில்லியிலுள்ள குடியரசுத் தலைவர் மாளிகையில் இந்தியாவின் அதி உயர் விருதான 'பாரத ரத்னா' விருதை குடியரசுத் தலைவர் ஆர். வெங்கடராமனிடம் இருந்து திரு. நெல்சன் மண்டேலா பெற்றுக் கொண்டார் என்பது தெரிந்ததே.

# பதில் அளிக்காவிட்டால் செயலிழக்கச் செய்வோம்

(யாழ்ப்பாணம்)

அகதிகளாக்கப்பட்ட மக்களின் பாதுகாப்புக் குறித்த தமது கோரிக்கைக்கு எதிர்வரும் இருபத்தைந்தாம் தேதிக்குள் பதிலளிக்கா விடின் ஐ. நா. சபையின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தை மக்கள் போராட்டங்கள் மூலம் செயலிழக்கச் செய்வோம்எனத் தமிழ்மாநில அகதிகள் பாதுகாப்பு மன்றம் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

இராணுவநடவடிக்கைகளை உடன் நிறுத்தி அரசியற் தீர்வொன்றை இலங்கை அரசு மூலமாக ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வற்புறுத்தி தமது ஐந்து அம்சக் கோரிக்கையை மகஜர் மூலம் ஐ. நா. சபையின் யாழ். கிளையில் நேற்று முன்தினம் காலைபொது மக்கள் சமர்ப்பித்தனர். தமிழர் ஆசிரியர் சங்கத்தினரும் இதில் கலந்து கொண்டனர். (மு)

# மருந்துக்குத் தட்டுப்பாடு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில்(மந்திகை) மருந்து வகைகளுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவிவருகின்றது. இதனால் இவ்வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர்கள்பலத்த இன்னல்களையனுபவித்து வருகின்றனர். கப்பல்களில் மருந்து வகைகள் வருவதாகச் செய்திகள் கூறும் அதே வேளையில் இவ் வைத்திய சாலையில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதனால் இங்கு சிகிச்சை பெறும் நோயாளர்கள் பலத்த அதிருப்தி அடைந்துள்ளனர். (25)

# புதிதாக எழுபத்தேழு பயிலுனர் ஆசிரியர்கள் தெரிவு

யாழ். கல்வித்திணைக்களத்தால் முதற்கட்டமாகபுதிதாக எழுபத்தேழு பயிலுனர் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. முன்னர் நடாத்தப்பட்ட நேர்முகப்பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையிலேயே இந்நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதுவரை பதவியைப் பொறுப்பேற்காதவர்கள் உடனடியாகப் பாடசாலைக்குச் சென்று கடமையைப்பொறுப்பேற்குமாறு பணிக்கப்பட்டுள்ளார்கள். (மு)

## நியமனங்கள்

வேலணையில் மூவருக்கு ஒரே பதவிக்கு வெவ்வேறு இடங்களில் இரு நியமனங்கள் வழங்கப்பட்டடுள்ளதாகத் தெரியவருகிறது. வேலணைப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற ஆசிரிய நியமனத்தின் போதே இவ்வாறான நியமனங்கள் வெவ்வேறு பாடசாலைகளுக்குகிடைக்த்துள்ளதாகத்தெரியவருகின்றது.

## உரம்பெற ஏற்பாடு

(வேலணை)

வேலணை கமநலச்சேவை நிலையத்தினர் தமது எல்லைக்குட்பட்ட விவசாயிகளுக்கு இவ்வாண்டு காலபோகத்துக்குத் தேவையான இரசாயன உரவகைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர். தேவையான உரவகைகளுக்கான முன் பதிவுகள் ஏற்றுக் கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## பாரதீய

வி. பி. சிங்கின் அரசாங்கம் கடைப்பிடிக்கும்கொள்கைக்கு எதிராகவே பாரதீய ஜனதாக் கட்சிஅதனது ஆதரவை விலக்கிக்கொண்டதாகஅறிவிக்கப்படுகின்றது.

## பணத்திற்கான

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உலர் உணவு விநியோகிக்காதவர்களுக்கும் 3 ஆம் கட்ட உலர் உணவுடன் சேர்த்து வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்

## திரு. மயில்வாகனம் மகேந்திரன்

(யாழ்ப்பாணக் கலால் திணைக்கள உதவி ஆணையாளர்)

கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும்
கச்சேரி நல்லூர் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவரு
மாகிய யாழ்ப்பாணக் கலால்திணைக்கள உதவி ஆணை
யாளர் திரு. மயில்வாகனம் மகேந்திரன் 17-10-90ஆம்
திகதியன்று காலமானார். இவர் திருமதி மயில்வாக
னத்தின் அன்பு மகனும், திருமதி இந்திராதேவியின்
அருமைக் கணவரும், ஹரேந்திரா (லண்டன்), நரேந்
திரா, சுரேந்திரா (கனடா), ரவீந்திரா ஆகியோரது
அன்புத் தகப்பனாரும், திருமதி சரஸ்வதி, திரு நாக
ரட்ணம், காலஞ்சென்ற கனகரத்தினம், காலஞ்சென்ற
சொக்கநாதன், ஞானாம்பிகை, சிவசுப்பிரமணியம், கன
காம்பிகை, மாணிக்கவாசகன், ராஜலட்சுமி, விஜய
நாதன், ரட்ணராஜா, ராஜரட்ணம் ஆகியோரது அன்
புச் சகோதரனும், காலஞ்சென்ற ஐயாத்துரை, லீலா,
பத்மா, மணிவாசகம், மலர், காலஞ்சென்ற திருநாவுக்
கரசு, ஜெயலட்சுமி, ஸ்ரீகாந்தன், அம்பிகை, செல்வ
ராணி, பவுசியா, காலஞ்சென்ற கமலாதேவி, ராதா
தேவி, சத்தியபால், மகேசன் ஆகியோரது அன்பு மைத்
துனரும், ராஜ்டே, வாசுகி ஆகியோரது மாமனாரும்
ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் அவரது கச்சேரி
நல்லூர் வீதியில் 71/2ஆம் இலக்க இல்லத்தில் நடை
பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக 18-10-90
ஆம் திகதி வியாழக்கிழமை இன்று காலை 10.00
மணிக்கு துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
உறவினர் நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை
ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

இந்திராதேவியும், பிள்ளைகளும்

71/2, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(R/746)

# கூட்டுறவுச் சங்கங்களில் மோசடி; அரசாங்க அதிபருக்குப் புகார்

(கொழும்புத்துறை)

யாழ். பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களின் கீழியங்கும் சில கிளைக் கடைகளில் பங்கீட்டு, நிவாரணப் பொருள்களில் மோசடிகள் இடம்பெறுவதாகப் பாவனையாளர்கள் யாழ்.அரசாங்க அதிபருக்கும், உதவி அரசாங்க அதிபருக்கும் புகார் செய்துள்ளனர்.

சில கிளைகளில் விநியோகிக்கப்படும் பொருள்களின் நிறை குறைவாக உள்ளதாகவும், தீப்பெட்டிக்குள் பத்துக்குச்சுகளே இருப்பதாகவும் பாவனையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஒவ்வொரு பலநோக்குக்கூட்டுறவுச் சங்கக் கிளைகளுக்கும் கிளைக்குழுக்கள் இருக்கின்ற போதிலும், இக்கிளைக் குழுக்கள் கிளைகளை மேற்பார்வை செய்வதில்லையென்றும், இன்றைய சூழ்நிலையில் மக்கள் அல்லல்படும் போதும் அலட்சியமாக இருப்பதாகவும் முறையிடப்பட்டுள்ளது. (24)

## புதுவகையில் தற்கொலை முயற்சி

தமரோன் கிருமிநாசினியை நிலத்தில் ஊற்றிவிட்டு அதன் மேல் ஓர் இளம் பெண் பத்து மணி நேரம் படுத்துறங்கியிருக்கிறார்.

ஆவரங்காலைச் சேர்ந்த உதயமலர் (வயது 20) என்ற இளம் குடும்பப் பெண் குடும்பத்தகராறுகாரணமாக மனம் உடைந்த நிலையில் மேற்படி முறையின் மூலமாக தற்கொலை செய்து கொள்ள முயற்சி செய்திருக்கிறார். இவர் மயக்கமடைந்த நிலையில் மானிப்பாய் போதனா மருத்துவமனைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

## இரத்தமின்மையால்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஷெல் தாக்குதலில் காயமடைந்த நிலையில் கொண்டுவரப்பட்ட ஒரு பெயரறியப்படாத பொதுமகன் ஒருவர் உயிரிழக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதேநேரம் அவசரமான இரத்தத் தேவையை நிவர்த்தி செய்வதற்காக உள்ளூர் செஞ்சிலுவைச்சங்கத்தை சேர்ந்த இளைஞர்கள் சிலர் இரத்த தானம் செய்துள்ளனர். அவர்களின் பெயர் விபரம்வருமாறு ந. ஆனந்தசபேசன், ப. சதீஸ்குமார், ந. ஞானசபேசன் க. இந்திரன், அ. ந. சுரேஸ் அ. ந. பிரகாஸ், இ. ஜெகதீசன் ஆகியோராகும். இந்த ஏழு இளைஞர்களும் இரத்த தானம் செய்துள்ள அதே வேளைதொடர்ந்தும்இரத்தத் தேவை இருந்து வருவதாக மானிப்பாய் வைத்தியசாலை வைத்தியர்கள் தெரிவித்தனர்.

### வசதி செய்து தரப்படும்

இரத்ததானம் செய்வதற்கு தற்போதைய நிலையில் ஒவ்வொரு பொதுஸ்தாபன அங்கத்தவர்களும் முன்வரவேண்டும் இதில் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள இளைஞர் மன்றங்களும் முன்வரவேண்டும். இவ்வாறுஇரத்ததானம்செய்ய முன்வரும் இளைஞர் மன்றங்களுக்குப்பாதுகாப்பானபோக்குவரத்து வசதிகள் செய்து தரப்படும் என அவ்வைத்திய அதிகாரி தெரிவித்தார்.(லோ)

## மின்சார

இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர் என்றும் சில தினங்களுக்கு முன்னர் வவுனியா-யாழ் வீதிப் பகுதி வீடுகளுக்குச் சென்ற இராணுவத்தினர் வீட்டு உரிமையாளர்களைக் கொண்டு பல பொருள்களை அபகரித்துச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (தி)

## 2500 விண்ணப்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்க முடியாத நிலையில் உள்ளது.

இக்காரியாலயத்திற்குவடக்குக் கிழக்குமாகாணசபையால் நியமனம் செய்யப்பட்ட பதினைந்து எழுது வினைஞர்கள் அண்மையில் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இதன் காரணமாக மேலும் இக்காரியாலய வேலைகள் ஸ்தம்பிதமடையலாம் என இக் காரியாலத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் எமது நிருபருக்கு அறிவித்துள்ளார்.

## கருத்தரங்கு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முத்திரைச் சந்திக்கருகாமையிலுள்ள சாதனா பாடசாலையில் நடைபெறவுள்ளது. சம்பந்தப்பட்ட ஊழியர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## மண்டைதீவு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் மீண்டும் அல்லைப்பிட்டி, மண்டைதீவுப்பகுதியில் தனது கிளைகளை புதிதாக வேறு இடங்களில் திறந்து அக் கிளைகள் மூலம் நிவாரணப் பொருள்களை வழங்கி வருகின்றன. ஏற்கனவே இப் பகுதியில் இருந்த இச் சங்கத்தின் கிளைகள் மூன்றில் இருந்தும் பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் அங்கு நிலைகொண்டிருந்த இராணுவத்தினரால் சூறையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (14)

## சுகாதார

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் யாவரும் அங்கு ஏற்படும் வயிற்றோட்டம், வாந்திபேதி, காய்ச்சல் என்பவற்றிற்கு அவர்களே மருந்துகளை கொடுத்து அந்த நோய்களை சுகப்படுத்தல் வேண்டுமென்றும் இவர்களுக்கான மருந்துப் புட்டிகளை யுனிசேவ் நிறுவனம் கொடுத்துதவுமெனவும் அகதி முகாம்களில் உள்ளவர்களுக்கு இவர்களினால் கொடுக்கப்படும் மருந்துகளுக்கு நோய்கள் குணப்படாது விட்டால் உடனடியாக வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமென்றும் அச் சுற்று நிருபத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. (14)

## நேற்று

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாக்கி வேட்டுக்கள் இடம் பெற்றுள்ளன.

### 'வெருளி'க்கும் ஹெலிசூடு

உரும்பராய் வடக்குப் பகுதியில் ஒரு தோட்டத்தில் நின்ற 'கத்தரிவெருளி' மீது ஹெலிகொப்ரர் ஒன்று கடுமையான துப்பாக்கி வேட்டுகளை தீர்த்ததில் அவ்வுருவத்தின் தலை சிதறியதுடன் உடலும் சரிந்ததும் ஹெலிக்கொப்ரர் அவ்விடத்தைவிட்டு நகர்ந்தது அப்பகுதி தோட்டக்காரர்கள் சிலர் அங்கு விரைந்து காயமடைந்தவரை தேடிய போது ஓரிடத்தில் தலைக்கு கவிழ்க்கப்பட்ட மண்பானை சிதறிய நிலையில் வெருளி ஒன்று சரிந்து கிடந்ததை கண்டு ஆச்சரியமடைந்தனர். (லோ)

## ஒருவர் பலி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளது. இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

இத்தாக்குதலில் மயிலிட்டியைச்சேர்ந்த தங்கராஜா (வயது 27), சிவசாந்தன் (வயது 19), இ. கொன்சன்ரைன் (வயது 28) ஆகியோர் பலத்த காயமடைந்த நிலையில் மானிப்பாய் போதனா மருத்துவமனைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க)

## 3 ஆவது

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற அவ்ரோ விமானக் குண்டு வீச்சு ஒன்றில் தெல்லிப்பளை மருத்துவமனை சேதத்திற்குள்ளானது. இந்த விமானத் தாக்குதலைத் தொடர்ந்து இந்த மருத்துவமனையின் செயற்பாடுகள் முற்றாக முடங்கிப் போயின மேலும் ஆவளையில் சுதேச வைத்திய நிலையத்தின் மீதும் விமானத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தவிர அப்பாவிப் பொதுமக்களின் வாழ்விடங்கள் பல முற்றாக சேதமாக்கப்பட்டுள்ளன கட்டுவன் பகுதியில் வை- பன்னிரண்டு ரக ராட்சத விமானம் நேபாம் குண்டுகளை வீசி பல வீடுகளை தீக்கிரையாக்கியது. இந்தக் குண்டுகளினால் பல மணி நேரம் கட்டுவன் பகுதி புகை மண்டலமாகக் காட்சியளித்தது. இதே போல தையிட்டிப் பகுதியில் பத்துக்கும் மேற்பட்ட வீடுகள் முற்றாகச் சேதத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளன.

இதே வேளை விமானப் படை ஹெலிகொப்ரர்கள் காலையிலிருந்து மாலைவரை தொடர்ச்சியான றொக்கட் தாக்குதலையும் கலிபர் வேட்டுக்களையும் தீர்த்த வண்ணம் நின்றது. கொல்லன் கலட்டி அம்பனை, தெல்லிப்பளை பகுதிகளை ஹெலிகள் வட்டமிட்டு தாக்கிய வண்ணம் இருந்தன கட்டுவன் சந்தியில் உள்ள பலநோக்கு கூட்டுறவு சங்க கட்டடம் விமானக்குண்டு வீச்சுக்கு இலக்கானதில் கடுமையான சேதத்திற்கு உள்ளாகியது. மேலும் காலை ஏழு மணியளவில் ஹெலிகொப்டர் றொக்கெட் தாக்குதலால் தெல்லிப்பளைதபாலக கட்டடத்திற்கு பலத்த சேதம் ஏற்பட்டது.

### கடற்படைத் தாக்குதல்

நேற்று மாலை நான்குமணியளவில் பலாலி இராணுவ முகாமை அண்டிய கடற்கரைப் பகுதியிலும் காங்கேசன் துறை கடற் பரப்பிலும் கடுமையான பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. இலக்கின்றி தாக்கப் பட்ட இவ் வேட்டுக்களால் கரையோர குடியிருப்புக்கள் நாசமாக்கப்பட்டுள்ளன. கடற்படை பீரங்கிப் படகுகள் தொடர்ச்சியான ரோந்து சேவையில் ஈடுபட்டுள்ளதுடன், பீரங்கி வேட்டுகளையும் தீர்த்த வண்ணம் இருந்தது.

### ஷெல் தாக்குதல்

விமானத் தாக்குதலும் கடற் பீரங்கித் தாக்குதலும் நடைபெற்றுக் கொண்டிருந்த அதேவேளை பலாலி இராணுவ முகாமிலிருந்து இடைவிடாத ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது இதனால் பலாலி இராணுவ முகாம் சுற்றாடலில் உள்ள வீடுகள் தீப்பற்றி எரிந்தன. பல மைல் தொலைவுகளுக்கப்பாலும் இந்த வீடுகள் எரிந்த புகைமண்டல காட்சியை காணக் கூடியதாக இருந்தது.

### மக்கள் வெளியேற்றம்

முப்படைகளும் தொடர்ச்சியாக மேற் கொண்டு வரும் இத்தாக்குதல்களை தொடர்ந்து பீதியடைந்த கொல்லன் கலட்டி, அம்பனை, தெல்லிப்பளைப் பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயரத் தொடங்கி உள்ளனர் இவர்கள் நேற்றுமாலை சுன்னாகம், மருதனாமடம், உடுவில், உரும்பராய் ஆகிய இடங்களுக்கு வந்தடைந்துள்ளனர். (ச)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 18ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.